SUBMITTERS CHARITY TRUST

# ஆண்டு அறிக்கை

## 2024/2025

www.submitterscharity.org

+91 93425 15180

submitterscharitytrust@gmail.com

69, அங்கப்பா தெரு, சென்னை 600001

# எங்களைப் பற்றி

சரணடைந்தோர் தர்ம ஸ்தாபனம் 2020 ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்டது. அது கோவிட் 19 பெருந்தொற்று நோயின் கடினமான காலமாக இருந்தது. இந்த நிலையில் தொடங்கப்பட்ட இந்த தர்ம ஸ்தாபனம் அந்த நேரத்தில் வேலை இழந்து வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு இது உதவிகரமாக இருந்தது. கோவிட் பெருந்தொற்று காரணமாக பொது முடக்கம் செய்யப்பட்டது. அதனால் சில சரணடைந்தோர்கள் நேரத்தை விரயம் செய்யாமல் இருப்பதற்காக ஆன்லைன் மூலம் இணைந்து குரானை கற்றுக்கொள்ள ஒரு குழு அமைத்து தினமும் மூன்று முறை கலந்து கொண்டு குரானை பயிலும் வாய்ப்பு கிடைத்தது. குர்ஆனை தினமும் பயின்றதால் கடவுள் தர்மம் செய்வதை சிறப்பான செயல்பாடாக கூறுவதை கற்றுக்கொண்டோம். அதனால் அந்தக் குழுவில் இருப்பவர்கள் அனைவரும் இணைந்து ஒரு தர்ம ஸ்தாபனம் உருவாக்கி அந்தக் குழுவில் இருக்கும் தேவையுடையவர்களுக்கு உதவ முடிவு செய்தோம். அதன் பிறகு தான் இந்தக் குழுவில் இல்லாத மற்றவர்களுக்கும் கோவிட் பெருந்தொற்று பொது முடக்கத்திற்கு பின்னர் தொடர்ந்து செயல்படுவதற்கு உத்வேகமாக இருந்தது.

சரண் அடைந்தோர் தர்ம ஸ்தாபனம் மக்கள் அனைவருக்கும் சுதந்திரமும் நீதியும் ஆரோக்கியமான வாழ்வியல் சூழ்நிலையும் கிடைப்பதற்காக பாடுபடும். மனித அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதிலும், சுற்றுச்சூழலை கவனித்துக் கொள்வதிலும், பொருளாதார அனைவருக்கும் நியாயமாக இருப்பதை உறுதி செய்வதிலும் இந்த தர்ம ஸ்தாபனம் பாடுபடும்.

ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமும் ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதன் மூலமும் தான் ஒரு சமூகத்தை வலுவாகவும், சிறப்பாகவும் மாற்ற முடியும் என்பது அடிப்படை நம்பிக்கையாக இருக்கிறது. பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களை ஆதரிப்பதற்கும், அனாதைகளை காப்பாற்றுவதற்கும், மனநலம் குன்றியவர்களை கவனிப்பதற்கும், முதியவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் இந்த தர்ம ஸ்தாபனம் பாடுபடும்.

திட்டங்கள் வகுத்து அதன் மூலம் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதன் மூலம் வருங்கால தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க இயலும்.

# என்ன செய்கிறோம்

## தொலைநோக்கு திட்டம்

பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயல்பட்டு இரக்கமுள்ள மற்றும் செழிப்பான சமுதாயத்தையும் அதன் தனி நபர்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த தர்ம ஸ்தாபனத்தின் தொலைநோக்குத் திட்டமாகும்.

## செயல்திட்டம்

கல்வியின் மூலமும், அறிவுப் பகிர்தலின் மூலமும் மக்களை அதிகாரப்படுத்தி சமூக உறவுகளை வலுப்படுத்துதல். அதன் மூலம் அனைவருக்கும் சமூக நீதி, பொருளாதார சமத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பொறுப்புணர்வு ஆகியவற்றை உறுதி செய்தல்.

# நம் செயல்பாடுகள்

### பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களுக்கான உதவி

தேவையான வருமானமின்றி இருக்கக்கூடிய விதவைகள், அனாதைகள் போன்ற பொருளாதாரத்தில் நலிவடைந்த 36 குடும்பங்களை கண்டறிந்து கடந்த நான்கு வருடமாக மாதாந்திர உதவித்தொகை வழங்கினோம்.

### குடும்பம் மற்றும் சமூகத்தால் கைவிடப்பட்டவர்களை மீட்டு பராமரிக்க உதவி செய்தல்

சாலையோரங்களில், பூங்காக்களில், ரயில் நிலையங்களில் குடும்பத்தாரால் கைவிடப்பட்டோ அல்லது மனநலம் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய ஆதரவற்ற அவர்களை மீட்டெடுக்கும் அகல் பவுண்டேஷன் இயக்கத்திற்கு கடந்த நான்கு ஆண்டுகளாக சிறு ஒத்துழைப்பு செய்கிறோம்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு ஆதரவு

மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளை வைத்து பராமரிக்கும் சுடர் அகாடமிக்கும் நாங்கள் எங்களால் இயன்ற ஒத்துழைப்பு செய்கிறோம்.

### முதியோர் பராமரிப்பு

வெளியில் சென்று தங்களுக்கான தேவையை கேட்டுப் பெறுவதற்கு கூட இயலாத வயது முதிர்ந்த தாத்தா பாட்டி அவர்களுக்கு உணவு வழங்கும் நிதர்சனம் சாரிட்டி டிரஸ்ட் இயக்கத்திற்கு எங்களால் இயன்ற அளவு மாதாந்திர பங்களிப்பை செய்து வருகிறோம்.

### குடும்பங்களுக்கான உதவி

| 2023 | 2024 | 2025 |
|---|---|---|
| 40 | 38 | 36 |

### சமூகத்தால் கைவிடப்பட்ட அநாதைகள் மீட்பு

| 2023 | 2024 | 2025 |
|---|---|---|
| 12 | 12 | 12 |

## கண்ணோட்டம்

சரணடைந்தோர் தர்ம ஸ்தாபனம் கடந்த மூன்று ஆண்டுகளில் முக்கிய திட்டங்கள் மூலம் சமூகத்தை ஆதரிப்பதில் நம் உறுதிப் பாட்டை தொடர்ந்தோம்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களுக்கான உதவியில், 2023 இல் 40 குடும்பங்களையும், 2024இல் 38 குடும்பங்களையும், 2025 இல் 36 குடும்பங்களையும் தர்ம பங்கீடு சென்றடைந்தது. எண்ணிக்கை சற்று குறைந்தாலும் நம் அனைவரின் பங்களிப்பால் சவால்களை சமாளித்து அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

அகல் அறக்கட்டளையின் மூலம் சமூகத்தால் கைவிடப்பட்ட 12 அனாதைகளை ஆண்டுதோறும் (2023 – 2025) மீட்டெடுக்க நம் தர்ம ஸ்தாபனம் மூலம் உதவினோம்.

சுடர் அகாடமி உடன் இணைந்து மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் தோறும் ₹ 3000 வீதம் ஆண்டுக்கு ₹36,000 வழங்கப்பட்டது.

நிதர்சனம் அறக்கட்டளையின் உதவியுடன் அவர்கள் செய்யும் தாத்தா பாட்டி உணவுத் திட்டத்தில் நம் தர்மஸ்தாபன மூலம் ஆண்டுக்கு ₹1,80,000 வழங்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக பெரும்பாலான முயற்சிகள் நிலையாக செய்யப்பட்டது, நம் தர்ம ஸ்தாபனம் மூலம் உதவி பெறுபவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைக்க நம் அனைவரின் பங்கீடு மூலம் உறுதி செய்யப்பட்டது.

### மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆதரவு

| 2023 | 2024 | 2025 |
|---|---|---|
| 36 K | 36 K | 36 K |

### முதியோர் பராமரிப்பு

| 2023 | 2024 | 2025 |
|---|---|---|
| 1.8 L | 1.8 L | 1.8 L |

# புள்ளிவிவரங்கள்

இந்த ஆண்டு நாம் ₹9,00,000 நன்கொடைகளை திரட்டி ₹9,00,000 செலவிட்டோம் - இது 100% நிதி பயன்பாடாகும். நம் நலத்திட்டத்தின் மூலம், 252 விதவைகள் ஆண்டு முழுவதும் ஆதரவைப் பெற்றனர் (மாதத்திற்கு சுமார் 21 பேர்). நம் தர்ம ஸ்தாபனத்தில் 30 நன்கொடையாளர்கள் தொடர்ந்து மாத மாதம் நன்கொடை அளிப்பவர்களாக உள்ளனர், இது நாம் சரியான திட்டத்தை வகுத்து அனைத்து பயன்பாட்டாளர்களையும் சென்றடைய வழிவகை செய்கிறது, அல்ஹம்துலில்லாஹ்.

விளக்கம்: நன்கொடைகள் மற்றும் விநியோகங்கள் சரியான சமநிலையில் உள்ளன. இன்னும் அதிகமான நன்கொடையாளர்கள் இணைந்து ஆதரவளித்தால் இன்ஷா அல்லாஹ் இன்னும் அதிகமான பயனாளர்களை சென்றடைய முடியும்.

## நன்கொடைகள் Vs விநியோகங்கள்




## 2024 / 2025ஆண்டு புள்ளிவிவரம்



SUBMITTERS CHARITY TRUST

# நன்றி

## 2024/2025

+91 93425 15180

submitterscharitytrust@gmail.com

69, அங்கப்பா தெரு, சென்னை 600001

www.submittercharity.org